பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 06 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி ஸ்லோவேனியா அதிபருடன் இருதரப்பு உறவுகள் குறித்து இன்று பேச்சு நடத்துகிறார்.

2. நாட்டின் வளர்ச்சித் திட்டப் பணிகளில் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என்று மத்திய நுகர்வோர் நலத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி வலியுறுத்தியுள்ளார்.

3. மஹாராஷ்டிரா மாநிலம் சோலாப்பூர் மாவட்டத்தில் தண்டல்வாடி அருகே நேரிட்ட சாலை விபத்தில் ஒரு குழந்தை உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

4. அர்மேனியா பொதுத் தேர்தலில் அந்நாட்டுப் பிரதமர் திரு. **Nikol Pashinyan** தலைமையிலான கட்சி வெற்றி பெற்றுள்ளது.

5. நாட்டின் வடகிழக்குப் பகுதிகளின் ஒருசில இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஜி-7 உச்சிமாநாடு ஃபிரான்சில் இன்று தொடங்குகிறது.

மூன்று நாள் நடைபெறும் இம்மாநாட்டில் ஃபிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

மேலும் இம்மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியா, பிரேசில், எகிப்து, கென்யா, தென்கொரியா, கத்தார், சவுதி அரேபியா, சிரியா, யுக்ரைன், ஐக்கியர அரபு அமீரகம் மற்றும் ஐரோப்பிய யூனியனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை நடைபெறும் அமர்வில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொண்டு உரையாற்றுகிறார்.

உலக அளவில் நிகழும் புவிசார் அரசியல் சூழலில் இந்தியாவின பங்கேற்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

நவீன தொழில்நுட்பம், பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பு மற்றும் வளரும் நாடுகளின் நலன்கள் குறித்து இந்தியா தனது கருத்துகளை எடுத்துரைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக நேற்று ஃபிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோனுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பிரதமர் பேச்சு நடத்தினார்.

இதையடுத்து பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஸ்லோவேனியா செல்கிறார்.

அங்கு அவருக்கு பாரம்பரிய முறைப்படி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அவரது இந்தப் பயணத்தின்போது அந்நாட்டு அதிபர் திரு. **Pellegrini** மற்றும் திரு. **Fico** ஆகியோரை சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்துகிறார்.

பின்னர் அங்குள்ள இந்திய வம்சாவளியினருடன் பிரதமர் கலந்துரையாடுகிறார்.

இந்திய பிரதமர் ஸ்லோவேனியா நாட்டிற்கு செல்வது இதுவே முதல் முறையாகும்.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு, புத்தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சித் திட்டப் பணிகளில் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என்று மத்திய நுகர்வோர் நலத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற கருத்தரங்கின் நிறைவு விழாவில் பேசிய அவர், UPI, டிஜி யாத்திரை, ஆகாஷ் ஏவுகணை போன்ற உலகத் தரத்திலான தயாரிப்புகள் உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

முக்கியத்துவம் வாய்ந்த தொழில்நுட்பங்களில் இந்தியா தன்னிறைவு பெற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கார்கில் போரின்போது GPS தரவுகளை இந்தியாவுக்கு அளிக்க அமெரிக்கா மறுத்ததை சுட்டிக்காட்டிய அவர், Navic செயற்கைக்கோள் தொழில்நுட்பம் பாதுகாப்பு படையினருக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

உள்நாட்டு கண்டுபிடிப்புகள் செலவுகளை பெருமளவில் குறைப்பதுடன் அன்னிய செலாவணியை சேமிக்கவும் உதவிடும் என்று அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் உற்பத்தி துறையில் இந்தியா தன்னிறைவு பெற வேண்டியதன் அவசியத்தை திரு. பிரல்ஹாத் ஜோஷி வலியுறுத்தினார்.

<<<<>>>>

சுற்றுச்சூழல் சமநிலைப் பராமரிக்கப்பட வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் வேண்டுகோளின் பேரில், நாடு முழுவதும் கோடிக்கணக்கான மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்தா சோனோவால் தெரிவித்துள்ளார்.

திரிபுரா மாநிலம் அகர்தலாவில் நடைபெற்ற மரம் நடும் விழாவில் பேசிய அவர், காற்று மாசுபாட்டிற்கு எதிராக காடுவளர்ப்புத் திட்டத்தை பெரிய அளவில் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தூய்மையான, பசுமையான இந்தியாவை கட்டமைப்பதற்காக, அன்னையின் பெயரில் மரக்கன்று நடும் பிரச்சாரத்தின் கீழ், மக்களிடையே மரக்கன்று நடும் இயக்கம் ஊக்குவிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களும் மரக்கன்று நடும் இயக்கத்தில் பங்கேற்க முன்வர வேண்டும் என்று திரு சார்பானந்தா சோனோவால் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் கவுதம புத்தா நகரில் உள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து வர்த்தக ரீதியிலான விமானப் போக்குவரத்து இன்று தொடங்குகிறது.

லக்னோவிற்கு இன்று காலை புறப்படும் முதல் விமானத்தில் 172 விவசாயிகள் மற்றும் 20 பெண்கள் பயணிக்கின்றனர்.

யமுனா விரைவுச் சாலை தொழில்துறை மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்து வடிவமைக்கப்பட்ட இந்த விமான நிலையத்தை கடந்த மார்ச் 28ஆம் தேதி பிரதமர் திறந்து வைத்தது குறிப்பிடத்தக்கது.

இந்த விமான நிலையத்தை அமைப்பதற்காக 3 ஆயிரத்து 300 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது இந்த விமான நிலையம் ஒன்று புள்ளி இரண்டு கோடி பயணிகளை கையாடும் திறன் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

அர்மேனியா பொதுத் தேர்தலில் அந்நாட்டுப் பிரதமர் திரு. **Nikol Pashinyan** தலைமையிலான கட்சி வெற்றி பெற்றுள்ளது.

ஜூன் **7**-ம் தேதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் கட்சி **49** புள்ளி **7** சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளதாக அந்நாட்டு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இந்தப் பொதுத் தேர்தலில் விதிமீறல்கள் நடைபெற்றுள்ளதன் காரணமாக தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணையம் ரத்து செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

<<<<>>>>

மஹாராஷ்டிரா மாநிலம் சோலாப்பூர் மாவட்டத்தில் தண்டல்வாடி அருகே நேரிட்ட சாலை விபத்தில் ஒரு குழந்தை உட்பட **8** பேர் உயிரிழந்தனர்.

பந்தர்பூரில் உள்ள ரஞ்சனி கிராமத்தைச் சேர்ந்த பக்தர்கள் சித்தானாத் கோயிலில் வழிபாடு செய்துவிட்டு சொந்த கிராமத்திற்குத் திரும்பும் போது, கட்டுப்பாட்டை இழந்த வாகனம் சாலை அருகில் இருந்த கிணற்றில் விழுந்து இந்த விபத்து நேரிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் காயமடைந்த ஐந்து பேர் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்றுள்ள காவல்துறையினர், வருவாய்த்த துறை அதிகாரிகள் உளூர் மக்களுடன் இணைந்து மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இதனிடையே, இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு, அம்மானிய முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நாவிஸ் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா 5 லட்ச ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

இதனிடையே இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த விபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாயும்,

காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆந்திரப்பிரதேச மாநிலம் பல்நாடு மாவட்டத்தில் கிருஷ்ணா நதியில் படகு நீரில் மூழ்கி ஏற்பட்ட விபத்தில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். 6 பேர் பத்திரமாக மீட்கப்பட்டள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிருஷ்ணா நதியில் இருந்த மனல் திட்டு மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்டும் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துக்களைத் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஈரான் - அமெரிக்கா இடையேயான போர்நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தம் இம்மாதம் 19ஆம் தேதி சுவிட்சர்லாந்தில் கையெழுத்தாகும் என்று சமூக வலைதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

இதையடுத்து, ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடை விரைவில் முடிவுக்கு வரும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானவுடன் ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் வர்த்தக கப்பல் போக்குவரத்திற்காக மீண்டும் திறந்துவிடப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

ஈரானின் அணுசக்தி செறிவூட்டல் நடவடிக்கைகளை கைவிடுவது குறித்த அம்சங்கள் இந்த போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளன.

இதனிடையே லெபனான் உட்பட அனைத்து விதமான ராணுவ நடவடிக்கைகளும் இன்று இரவு முதல் முடிவுக்கு வரும் என்று ஈரான் தேசிய பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாட்டின் வடகிழக்குப் பகுதிகள் மற்றும் மேற்கு வங்கத்தில் ஒருசில இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மஹாராஷ்ட்ரா, கர்நாடகா, தெலங்கானா, ஆந்திர பிரதேசம், ஒடிசா, ஜார்க்கண்ட், பீகார், சட்டிஸ்கர் மாநிலங்களில் சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களில் தென்மேற்குப் பருவ மழை தீவிரமடைய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

ராஜஸ்தான், கிழக்கு உத்தர பிரதேசம், மத்தியப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் ஒருசில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

தில்லிம் ஹரியானா, சண்டிகார், பஞ்சாப், ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகாண்ட் , தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், அந்தமான் & நிக்கோபார் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில், ஒருசில

இடங்களில் இன்று இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

உலகக்கோப்பை மகளிர் டிவென்டி-டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 64 ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

பர்மிங்ஹாமில் நேற்று நடைபெற்ற போட்டியில், முதலில் ஆடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 170 ரன் எடுத்தது.

இதனையடுத்து 171 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பாகிஸ்தான் 17 ஓவரில் 106 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<The End>>>>